முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1115

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.10.2022, செவ்வாய்கிழமை

1. ஓங்கார தவசியே அரங்கா வாழ்க
ஓங்கார பிரம்மமே தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே
ஓதிடுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் முதல் நாள் 18.10.2022, செவ்வாய்கிழமை)
2. ஆசியதும் அரங்கன் சக்தி பெருகவும்
ஆசியதும் அரங்கனுக்குள் என் ஆற்றல் வளரவும்
நேசமுடன் ஞான அறிவுரையாக
ஞானபண்டிதன் யானும் தொடர்ந்து அருள் புரிந்து வருவேன்
3. வருகவே அரங்கனை காக்கும் முகமாக
வல்லமைபட வடிவேலன் யான் சூட்சும வேலி
தர்மவேலியாக மகா சூட்சும சக்தியாக
தவராஜன் அறைக்குள் ஆற்றலை நிரப்பி ஆறுமுகன் யான்
4. யானும் காத்து வருகின்றேன்
வல்லமைபட அரங்கன் அறைக்குள்
வந்துசெல்லும் உலகமக்கள் அனைவருக்கும்
நிறைவான ஞானமும் நிம்மதியான வாழ்வும்
5. குறைவின்றி ஞான பலமோடு
இனி குவலயத்தில் பிறவி காணாத
நிலையும் கண்டு சிறக்க
ஆறுமுகன் என் ஆசி உண்டு
6. ஆசிதந்தேன் அரங்கன் வழியில்
அற்புதம் உலகம் கண்டு
ஆற்றல் பட ஞான ஆட்சிக்காலமாக
தடையற சடுதி மாற்றங்காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–